**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROJECT OF M/S. UNIVERSAL MINING CORPORATION LOCATED AT S.F.NO: 36 (P), OF KONDAPPANAICKENPATTY VILLAGE, SALEM TALUK, SALEM DISTRICT ON 26.02.2021 AT 10.00 AM IN VINAYAGA MISSIONS ANNAPOORANI THIRUMANA MAHAL NO 54, YERCAUD MAIN ROAD, KONDAPPANAICKENPATTY VILLAGE, SALEM TALUK AND SALEM DISTRICT.**

**PARTICIPANTS THIRUVALARKAL:**

| | | | |
|---|---|---|---|
| 1 | S.A. Raman, I.A.S. | : | The District Collector, Salem |
| 2 | Dr. V. Gopalakrishnan, M.E, Ph.D., | : | The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem. |
| 3 | G. Rajkumar | : | Project Proponent of M/s. Universal Mining Corporation, Kondappanaickenpatty, Salem |
| 4 | Dr. P.Thangaraj | : | Geologist and Consultant, M/s. Geo Exploration and Mining Solutions, Salem. |

The list (attendance register) of the public and Environmentalists ( 66 Nos.) are attended the public hearing is enclosed herewith.

At the outset, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Salem welcomed the District Collector, Salem, EIA Consultant, Environmentalist, public and the project proponent for the public hearing of M/s. Universal Mining Corporation located at Kondappanaickenpatty Village, Salem Taluk. He further requested the EIA consultant to present the details of the project on behalf of the project proponent. Thiru.P.Thangaraj, EIA Consultant, presented the project through Power Point presentation. Then the District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Salem requested the public to give their opinion about the project by stating their name and the village.

Thiumathi. Selvi, Chettichavadi stated that the universal mining corporation has been closed for the last three years because of which people lost their employment and

were affected. If the mines reopen again the public may get some employment and there is no adverse effect because of this mining quarry.

Thiru Govindarajan, Vinayagampatti reported that Tamil Nadu Magnesite Limited and Dalmia Magnesite Limited were under closure. If the unit of universal Mining Corporation opens the public may get some employment and the sustenance may be improved.

Thiru Kandasamy, Chettichavadi told that the people in and around Kondappanaickenpatty have been affected with unemployment, if the quarry of universal mining corporation reopens the public may get some employment.

Thiru V. Sunanda Reddy, Environmentalist stated that he is a pro industrialist usually environmentalist will oppose industrialization. However he supports industries because people in the age of 18 to 35 are highly unemployed. In the same time the environmental has to be protected so he wants to give some suggestions for improving the environmental management around the quarry. He requested that base data of water, air, land shall be collected for surrounding 10 kilo metres of the area, which might be useful in further development based on the local condition so that the environment may be improved and people will be benefited by the same. He further requested to carryout mining operations hectare to hectare., ie., first a hectare of land shall be mined and it should be closed by filling waste earth and green belt should be developed by planting fruit bearing & medicinal value trees and plants. If the above is not possible the mined out area shall be utilised for saving water so that the public may get benefited either way. He also requested to give skill development programs for the youth around the area through CSR activity. He also informed that he supports the universal mining corporation.

Thiru P V Reddy, Anantapur, Environmentalist said that he supports the opening of Universal Mining Corporation and environmental clearance shall be awarded to the quarry.

Thiru H Madhubabu, Environment & Social Activist reported that he supports the opening of Universal Mining Corporation and gave written opinion and suggestions.

Thiru Kannan, Telephone colony told that his father worked as driver in the quarry. Since it has been closed for the last three years, he is unemployed which affects their family. If the universal mining corporation quarry reopens his father and he might get employment again.

Finally the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board stated that the views and comments of the public have been recorded through audio and video arrangement and also the received written views/opinions will be submitted to State Environmental Impact Assessment Authority and with that the meeting came to an end with vote of thanks.

Encl: 1. Copy of Attendance Register
2. Copy of written views and comments -5 Nos.

26/02/21

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Salem.

26/2/21

District Collector,
Salem District,
Salem.

3/5

**<u>தி/ள்.யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன், புல.எண்.36 பகுதி, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம், சேலம் தாலுகா, சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் சேலம் மாவட்டம், சேலம் வட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் ஏற்காடு மெயின் ரோட்டில் உள்ள தி/ள்.விநாயகா மிஷன்ஸ் அன்னபூரணி திருமண மஹாலில் 26.02.2021 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்கும் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.</u>**

**<u>கலந்துகொண்ட அலுவலர்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.A. ராமன், இ.ஆ.ப., | : | மாவட்ட ஆட்சியர், சேலம் |
| 2 | முனைவர்.திரு.வெ.கோபாலகிருஷ்ணன், எம்.இ., பி.எச்.டி., | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம். |
| 3 | திரு.G.ராஜ்குமார் | : | சுரங்க உரிமையாளர், தி/ள்.யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன், கொண்டப்பநாயக்கன்பட்டி, சேலம். |
| 4 | முனைவர். P. தங்கராஜ் | : | புவியியலாளர் மற்றும் ஆலோசகர், தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எண்ணிக்கை: 66 (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

ஆரம்பத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்கள் சுரங்க உரிமையாளர் அவர்கள் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி வட்டத்தில் அமைந்துள்ள தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் என்ற சுரங்கத்தின் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் வரவேற்றார். பின்பு நிர்வாகத்தின் சார்பில் திட்டத்தினை பற்றி நிர்வாகத்தின் ஆலோசகர் அவர்கள் விளக்கி கூறுவார்கள் என்று கூறினார்.

திரு.Dr.ப.தங்கராஜ், புவியியலாளர் மற்றும் ஆலோசகர் அவர்கள் திட்டத்தினை பற்றி பவர் பாயிண்ட் மூலம் விளக்கி கூறினார். அதன் பின்பு மாவட்ட சுற்றுற்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சேலம் அவர்கள் இந்த திட்டத்தினை பற்றி கருத்து கூற விரும்புவர்கள் தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை கூறிவிட்டு கருத்து கூற கேட்டுக்கொண்டார்.

திருமதி. செல்வி, செட்டிச்சாவடி, அவர்கள் தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கமானது கடந்த 3 ஆண்டுகளாக மூடப்பட்டு இருப்பதாகவும், அதனால் வேலையில்லாமல் பொது மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளதாகவும் தெரிவித்தார். தற்போது இந்த சுரங்கம் திறக்கப்பட்டால் பொது மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும், இந்த சுரங்கத்தினால் எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்தார்கள்.

திரு.கோவிந்தராஜன், விநாயகம்பட்டி அவர்கள் அப்பகுதியில் உள்ள தி/ள். தமிழ்நாடு மேக்னசைட் மற்றும் தி/ள். டால்மியா மேக்னசைட் ஆகிய சுரங்கங்கள் மூடப்பட்டு இருப்பதால் இந்த தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் நிறுவனம் திறக்கப்பெற்றால் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் எனவும், அதனால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் தெரிவித்தார்கள்.

திரு.கந்தசாமி, செட்டிச்சாவடி அவர்கள் கொண்டப்பநாயக்கன்பட்டி பகுதி மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள பொது மக்கள் வேலையின்மையால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகவும், இந்த தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கமானது திறக்கப்பட்டால் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்கள்.

திரு. வி.சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் ஆர்வலர்அவர்கள் தான் தொழில் வளர்ச்சியை ஆதரிக்கும் ஒரு சுற்றுச்சூழல்வாதி என தன்னை அறிமுகப்படுத்திகொண்டார். பொதுவாக சுற்றுச்சூழல் வல்லுநர்கள் சுரங்கங்களை எதிர்ப்பார்கள், ஆனால் நான் சுரங்க தயாரிப்புகளை ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்கள். இந்தியாவில் 18 முதல் 35 வயதிற்குட்பட்டவர்கள் அதிகமாக இருப்பவர்கள் வேலை வாய்ப்பை எதிர்நோக்கி இருப்பதாகவும், எனினும் சுற்றுச்சூழல் வளர்ச்சியை பேணிக்காக்க வேண்டும் எனவும் கூறினார். சுற்றுச்சூழல் மேலாண்மைக்கும், வளர்ச்சிக்கும் தான் சில கருத்துக்களை கூறுகிறேன் என்றார். இந்த இடத்தை சுற்றியுள்ள 10 கி.மீ சுற்றளவில் உள்ள இடங்களில் மரங்களை வளர்க்க வேண்டும் எனவும், இது சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும் எனவும் கூறினார். சுற்றுச்சூழல் சமநிலையை தக்க வைத்துக் கொண்டால் பெறும் பயன் கிடைக்கும் அதற்கு சுரங்கத்தில் 1 ஹெக்டேர் அளவை பயன்படுத்தி அதில் மரங்களை நடப்பட வேண்டும், அவ்வாறு மரங்களை நடவில்லையென்றால் நீர்த்தொட்டியாக பயன்படுத்த வேண்டும் எனவும் கூறினார். இந்த சுரங்கத் தொழிலை செய்யும் பொருட்டு தாங்கள் அருகில் உள்ள கிராமங்களில் மரங்களை நடவேண்டும் எனவும், அவ்வாறு நடும் மரங்களிலும் மருத்துவ குணமுடைய மரங்களையும், பழ மரங்களையும் நடவு செய்தால் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் கூறினார். அப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க வேண்டும் எனவும், அது அவர்களின்

எதிர்கால முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்றும் கூறினார். இந்த தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்க தான் தனது முழு ஆதரவை தருவதாக தெரிவித்தார்.

திரு. பி.வி.ரெட்டி, அனந்தபூர், சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்கள் தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கம் திறக்க தான் தனது முழு ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார். இந்த சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்க வேண்டும் எனவும் கூறினார்.

திரு.மதுபாபு, சுற்றுச்சூழல் ஆர்வலர் அவர்கள் தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கம் திறக்க தான் தன்னுடைய ஆதரவை வழங்குவதாக கூறினார்.

திரு.கண்ணன், டெலிபோன் காலனி அவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக தன்னுடைய தந்தை இந்த சுரங்கத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்ததாகவும், தற்போது பணியில்லாமல் தனது குடும்பம் மிகவும் வருமையில் உள்ளதாகவும், இந்த தி/ள். யுனிவர்சல் மைனிங் கார்ப்பரேஷன் சுரங்கம் திறக்கப்பெற்றால் தனது தந்தைக்கும், தனக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் எனக்கூறினார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொது மக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் ஒளி, ஒலியாக பதிவு செய்யப்பட்டும், பெறப்பட்ட மனுக்களும் இணைத்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறினார். பொது மக்களின் கருத்துக் கேட்புரையானது நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

இணைப்பு : 1. வருகைப் பதிவேடு நகல்
2. பொதுமக்களின் எழுத்துக் கருத்துக்கள் – 5 எண்கள்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
சேலம்

மாவட்ட ஆட்சியர்
சேலம் மாவட்டம்
சேலம்

2/5